| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | இராமநாதபுரம் | காலம்: | 22/06/2024 | முதல் | 26/06/2024 |
| | அறிக்கை எண் : | 050/ 2024 | வெளியீட்டு நாள்: | 21/06/2024 | | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (16.06.2024 முதல் 20.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 26-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/06 | 17/06 | 18/06 | 19/06 | 20/06 | தேதி | நாள்-1 22/06 | நாள்-2 23/06 | நாள்-3 24/06 | நாள்-4 25/06 | நாள்-5 26/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.7 | 3.4 | மழை (மி.மீ) | 1 | 3 | 6 | 3 | 2 |
| 35 | 35 | 35 | 35 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 36 | 36 | 35 | 34 |
| 26 | 26 | 27 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 23 | 23 |
| 4 | 3 | 5 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 7 | 7 | 6 |
| 64 | 73 | 76 | 71 | 80 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 70 | 70 | 70 | 60 |
| 79 | 78 | 71 | 84 | 75 | | 40 | 50 | 50 | 50 | 40 |
| 9 | 13 | 13 | 4 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 20 | 22 | 28 | 26 | 26 |
| தெற்கு | தெற்கு | தென் மேற்கு | வட மேற்கு | தெற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 23, 24, 25 மற்றும் 26 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 20 முதல் 28 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(21ஜூன்-04 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பானது முதல் முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 36° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 20 முதல் 28 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**விவசாயம் :**

கடந்த சில நாட்களாக ஓரளவு மழைப் பொழிவு பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம்.

மேலும் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மருந்து தெளிக்கும் வேலைகளை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, மிளகாய், கால்நடை.**

**தக்காளி:**

காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்டம் உரமிடுதல் நல்ல பயனளிக்கும். பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர்பாசனம் வழி விடுதல் அல்லது இலை வழியாக தெளிக்கவும்.

**மிளகாய்:**

மிளகாய் பயிரில் தற்போது பரவலாக போரான் சத்து பற்றாக்குறை தென்படுகிறது. இந்த பற்றாக்குறையின் அறிகுறியாக இளம் இலைகள், மேடும் பள்ளமாக மாறிவிடும், முதிர்ந்த இலைகளின் நுனியில் மஞ்சள் நிறம் தோன்றி இலை ஓரங்களில் பரவும். நடு நரம்புகள் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக மாறும், இலைகள் கெட்டியாகி விரைவில் நொறுங்கி விடும். இதனை நிவர்த்தி செய்ய 1லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் போராக்ஸ் என்ற அளவில் கரைசல் தயாரித்து அறிகுறிகள் மறையும் வரை 10 நாள் இடைவெளியில் இலை வழியாகத் தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் மாடுகளுக்கு தினமும்; 2 முதல் 3 கிராம் வரை இட்லிக்குப் போடப்படும் சோடா உப்பும், 15 முதல் 20 கிராம் வரை சமையலுக்கு உபயோகிக்கும் உப்பும் தீவனத்துடன் சேர்த்து அளித்து வந்தால், பாலில் எஸ்.என்.எப். என்ற கொழுப்பற்ற திடப்பொருட்களின் அளவு அதிகரிக்கும்.